முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1407

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.08.2023,** ஞாயிற்றுக்கிழமை

(சோபகிருது வருடம் ஆடி மாதம் 21 ம் நாள்)

1. தர்மராஜனே அரங்கா வாழ்க
தவபலம் கொண்ட தேசிகா வாழ்க
பெருமைமிக்க தர்மலோகம் அமைக்க
பேருலகமெங்கும் அன்னதான கிளைகள் துவக்கி
2. துவக்கியே தொண்டர்படை மூலம்
தூயபணியாற்றும் அரங்கனே
இடரின்றி இந்த கலியுகத்தில்
இனிதே உன்வழி மக்கள் வந்து
3. வந்துமே சன்மார்க்க நெறிமுறையை
வல்லமைபட உலகெங்கும் பரப்ப
சிந்தைபட இந்த கலியுகம்
செப்பிடுவேன் ஞானயுகமாக மாற்றங்கண்டு
4. விந்தைபட அரங்கன் தயவாலும்
வேலவன் என் அருளாசியாலும்
இந்த பேருலகம் ஞானலோகமாகி
புண்ணியவான்கள் நிரம்பிய ஞானசபையாக உலகம் மாறி
5. ஞானஆட்சிக்காலம் அரங்கன் தயவாலே அரங்கேறும்
ஆற்றல்பட அரங்கன் தொண்டர்களாலே இந்த அற்புதம் நிகழும்
அகிலத்தார் தொடர்ந்து அரங்கன் வழி வர
ஆற்றல்கூடி ஞானிகளாகவும் ஞானவான்களாக சிறந்து
6. ஞானசித்தர் காலம் படைத்து இனிதே
ஞானிகள் ஆளும் ஞான பூமியை உருவாக்கி அற்புதம்பட
ஞானதேசிகன் அவதார நோக்கத்தை பூர்த்தி செய்வர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–